**14.12.2022**

**OS.No. 38/2022 DW : 1, திரு. முருகேஷ்**

**குறுக்கு விசாரணை...**

நிர்மலா, மாலா ஆகியோர்கள் என்னுடைய மனைவியின் சகோதரிகள். கண்ணப்பன் என் மனைவியின் தம்பி. 1ஆம் பிரதிவாதி என் மனைவி. 2 முதல் 4 பிரதிவாதிகள் என் மனைவியின் சகோதரிகள் தான். அவர்கள் ராஜா ரெட்டி மற்றும் சாவித்திரியம்மாளின் பிள்ளைகள். தாவா சொத்து குமாரராஜ பேட்டையில் இருக்கிறது. தாவா சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. என்னுடைய சொத்தின் சர்வே எண்கள் தான் எனக்கு தெரியும். தாவா சொத்தின் மொத்த அளவு சுமார் 7 ஏக்கர் இருக்கும். தாவா சொத்து ராஜா ரெட்டி, சாவித்திரியின் பூர்வீக சொத்து என்று சொன்னால் அது ராஜா ரெட்டியின் சுயசம்பாத்திய சொத்துக்கள் ஆகும். சுயசம்பாத்திய சொத்துக்கள் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யமுடியும். தாவா சொத்துக்கள் 7, 8 சர்வே எண்களில் இருக்கிறது. தாவா சொத்துக்களில் நான்குமால்களை கூறமுடியுமா என்று கேட்டால் நான் வாங்கிய சொத்துக்களின் நான்குமால்கள் கூறமுடியும். சாவித்திரியம்மாளுக்கு தனியாக சொத்து இருந்ததா என்று கேட்டால் அவர் பெயரில் ராஜா ரெட்டி சொத்துக்களை வாங்கினார். ராஜா ரெட்டி 2010ல் காலமானார். சாவித்திரியம்மாள் 2012ல் காலமானார். ராஜா ரெட்டி உயிரோடு இருக்கும்போது சாவித்திரிக்கு சொத்து ஏதேனும் எழுதி வைத்தாரா என்று எனக்கு தெரியாது. ராஜா ரெட்டி உயிரோடு இருக்கும்போது எனக்கு தெரிய அவர் சொத்துக்களை விற்கவில்லை. நான் ராஜா ரெட்டியிடமிருந்து கிரையம் வாங்கினேன். நான் அசல்

ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் 2 அசல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். மற்றும் 2 அசல் ஆவணங்களை கடன் வாங்குவதற்காக பள்ளிப்பட்டு கனரா வங்கியில் கொடுத்திருக்கிறேன். தேவைப்பட்டால் அதை வரவழைக்கலாமா என்று கேட்டால் வங்கி சம்மதித்தால் வரவழைக்கலாம். சர்வே எண் 227/2சி மற்றும் 227/3இ-ல் உள்ள சொத்துக்களுக்குரிய பத்திரத்தை வங்கியில் வைத்திருக்கிறேன். மீதியுள்ள 2அசல் ஆவணங்களை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவ்விதம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நகல் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் போலியானது என்றும் அதை மறைக்கத்தான் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ராஜா ரெட்டி எப்போதும் எனக்கு சொத்தை கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் உறவுமுறையை பயன்படுத்தி என் மனைவியின் மூலம் பொய்யான கிரைய ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு 1985ல் திருமணமானது. நான் 1996ம் வருடம் கிரையம் வாங்கினேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் ராஜா ரெட்டியிடம் கிரையம் வாங்கிய சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் இல்லை. 1996க்கு பின்னர் தான் எனக்கு விவசாய வருமானம் வந்தது. நான் சொத்தை வாங்குவதற்கு முன்னர் எனக்கு வருமானமே இல்லை என்றால் சரியல்ல. நான் பெங்களூரில் 10 வருடம் வேலை

பார்த்து சம்பாதித்தேன். அதற்கான ஆவணங்கள் இல்லை. பெங்களூரில் வேலை பார்த்தாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. ராஜா ரெட்டி இறந்தபின்னர் சொத்துக்களை அவரது பிள்ளைகள் பாகம் செய்து கொள்ளவில்லை. கண்ணப்பன் அவராகவே ஒரு ஆவணம் எழுதி கொண்டார். ராஜா ரெட்டி உயிருடன் இருக்கும்போது சொத்துக்களை பிரிக்கவில்லை. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ராஜா ரெட்டி சொத்தை எழுதி வைத்தார். வாதிகள் மற்றும் 1ஆம் பிரதிவாதிக்கு ராஜா ரெட்டி சொத்துக்களை எழுதி வைக்கவில்லை. சொத்து கொடுப்பதாக சொன்னார் ஆனால் எழுதி வைக்கவில்லை. 7 பிள்ளைகள் இருக்கும்போது 3 பிள்ளைகளுக்கு மட்டும் அவர் சொத்தை எழுதி வைக்க காரணம் இருக்கிறதா என்று கேட்டால் இருக்கும் ஒரே மகன் பெண் குழந்தைகளுக்கு செய்யமாட்டார் என்று கருதி அவர் 2முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்தார். 1, 2 வாதிகள் மற்றும் 1ஆம் பிரதிவாதியின் பெண்குழந்தைகள் ஆக இருக்கும்போது அவர்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டால் 1ஆம் வாதி செட்டிலாகிவிட்டார் என்றும் அவருக்கு கொடுக்க தேவையில்லை என்றும் 2ம் வாதி மற்றும் 1ஆம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னார். சொத்துக்கள் ராஜா ரெட்டியின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்பதற்கான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. நகல் கேட்டிருக்கிறோம். சில பிள்ளைகளை விட்டுவிட்டு சில பிள்ளைகளுக்கு மட்டும் சொத்தை எழுதி வைக்க

ராஜா ரெட்டி எப்போதும் விரும்பியதில்லை என்றால் சரியல்ல. அவர் எழுதிவைத்ததை போல ஆவணங்களை நான் தயார் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.